ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2021.03.04 |

# நாணயக் கொள்கை மீளாய்வு : இல.2 – 2021 மாச்சு

## இலங்கை மத்திய வங்கி தற்போதுள்ள தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான அதன் கடமைப்பொறுப்பினை மீளவும் உறுதிப்படுத்துகின்றது

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது, 2021 மாச்சு 03ஆம் திகதியன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில், மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 4.50 சதவீதம் மற்றும் 5.50 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது. பேரண்ட பொருளாதார நிலைமைகளையும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பக்கங்களில் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகளையும் கவனமாக பரிசீலித்ததன் பின்னர் சபை இத்தீர்மானத்தை மேற்கொண்டது. சபையானது தனியார் துறைக்கான கொடுகடன் பகிர்ந்தளிப்புக்களில் அண்மைக்கால மெதுவடைதலினையும் பொருளாதாரத்தின் உற்பத்தித் திறன்மிக்க துறைகளுக்கு போதுமானதற்ற கடன்வழங்கலையும் அவதானத்தில் கொண்டதுடன் தற்போது முன்னெடுக்கப்படும் உள்நாட்டு உற்பத்தி அடிப்படையிலமைந்த பொருளாதார நடவடிக்கையின் மீட்சிக்கு ஆதரவளிக்கும் பொருட்டு, உற்பத்தித் திறன்மிக்க துறைகளுக்கு முனைப்புடன் கடன் வழங்குவதற்கான நிதியியல் முறைமைக்கான தேவையினையும் வலியுறுத்தியது. மேலும், சில சந்தை வட்டி வீதங்களில் அண்மைக்கால மேல்நோக்கிய போக்குகளை சபை அவதானித்ததுடன் குறைவான பணவீக்கச் சூழலைக் கொண்ட பின்னணியில் பொருளாதாரம், உறுதியாக புத்துயிர்பெறுகின்ற அறிகுறிகளை காண்பிக்கும் வரை குறைந்த வட்டி வீதக் கட்டமைப்பினை தொடந்தும் முன்னெடுப்பதற்கான அதன் அர்ப்பணிப்பினை மீளவும் வலியுறுத்தியது.

**இலங்கைப் பொருளாதாரமானது கொள்கைத் தூண்டுதல்கள் அத்துடன் மேம்படுகின்ற வியாபார மனோபாவங்கள் மூலம் துணையளிக்கப்பட்டு 2021இல் குறிப்பிடத்தக்களவு மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது**

குறைவான பணவீக்கச் சூழலினைக் கருத்திற்கொண்டு, மத்திய வங்கியானது உற்பத்தி அடிப்படையிலமைந்த பொருளாதாரமொன்றினை உருவாக்குவதனை மையப்படுத்திய அரசாங்கத்தின் பொருளாதார நிகழ்ச்சி நிரலுக்கு முனைப்புடன் ஆதரவளிக்கும் செயன்முறையினை முன்னெடுக்கின்றது. நாட்டில் கொவிட்-19 தடுப்புமருந்து வழங்கல் மூலம் தூண்டப்பட்ட சாதகமான எண்ணப்பாங்குகளும் வளர்ச்சியினை ஊக்குவிக்கின்ற கொள்கைகளின் தாக்கமும் குறுகிய காலத்திலிருந்து நடுத்தரகாலத்தில் பொருளாதாரம் புத்துயிர்பெறுவதற்கு துணையளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் மத்திய வங்கியினால் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றது**

இறக்குமதிகள் மீதான செலவினத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியிலிருந்து பயனடைந்து வர்த்தகப் பற்றாக்குறை 2020இல் ஐ.அ.டொலர் 2.0 பில்லியனால் சுருக்கமடைந்தது. இது ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் வீழ்ச்சியை விடவும் அதிகமாக ஈடளித்துள்ளது. வர்த்தகப் பற்றாக்குறையானது அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட பொருத்தமான வழிமுறைகள் மூலம் துணையளிக்கப்பட்டு 2021இல் மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2020 நடுப்பகுதியிலிருந்து தொழிலாளர்

பணவனுப்பல்கள் தொடர்ந்தும் நிலையாக அதிகரித்து 5.8 சதவீதம் கொண்ட ஆண்டு அதிகரிப்பொன்றினையும் முன்னைய ஆண்டினை விட 2021 சனவரியில் 16.3 சதவீதம் கொண்ட மேலதிக வளர்ச்சியொன்றினையும் பதிவுசெய்தன. உள்நாட்டிலும் உலகளவிலும் தடுப்பு மருந்து வழங்கப்படுவதுடன் இணைந்து 2021இன் சுற்றுலாத் துறை படிப்படியாக மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. செலாவணி வீதம் அவ்வப்போதான தளம்பலைப் பதிவுசெய்துள்ளதுடன் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அத்தகைய தளம்பலினை ஏற்படுத்துகின்ற மிதமிஞ்சிய ஊகத்தினை ஊக்கமிழக்கச் செய்வதற்கு மத்திய வங்கி நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 2020இல் 2.6 சதவீத தேய்வடைதலின் பின்னர் 2021இன் இதுவரையிலும் 4.5 சதவீதம் தேய்வடைந்துள்ளது. 2021 சனவரி இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 3.7 மாதங்களைக் கொண்ட இறக்குமதிக்குப் போதுமானதாக ஐ.அ.டொலர் 4.8 பில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்தது. வெளிநாட்டு நிதியிடலைப் பெற்றுக்கொள்வதன் மீதான கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகள் மூலம் துணையளிக்கப்பட்டு படுகடனைத் தோற்றுவிக்காத அதிகரித்த வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. பாதகமான ஊகத்திற்கு மத்தியில் அரசாங்கத்தின் அனைத்து படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளும் 2021இல் இதுவரையிலும் முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்திலும் அதன் மாசற்ற படுகடன் தீர்ப்பனவு பதிவினை பேணுவதற்கு அரசாங்கம் அர்ப்பணித்துள்ளது.

**2020இன் முந்திய பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை தளர்த்தல் வழிமுறைகள் வரலாற்றிலேயே குறைவான வட்டி வீதங்களைத் தோற்றுவித்துள்ளன**

கடந்த அண்மைக்காலங்களில் இலங்கை மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட நாணய தளர்த்தல் வழிமுறைகள் சென்றடைவதனைப் பிரதிபலித்து, சந்தை வைப்பு மற்றும் கடன் வழங்கல் வீதங்கள் இரண்டும் ஒற்றை இலக்க வட்டி வீதக் கட்டமைப்பொன்றினை நிறுவுவதை நோக்கி கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளன. பல சந்தை வட்டி வீதங்கள் வரலாற்றிலேயே அவற்றின் குறைந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்துள்ளன. எனினும், அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகள் போன்ற சில சந்தை வட்டி வீதங்கள் அண்மைக்காலங்களில் ஆதாராமற்ற தளம்பலைக் காண்பித்தன. இவை, நாணயக் கொள்கை எதிர்பார்க்கைகளுக்கு இசைவற்றவையாகும். பணச் சந்தையில் காணப்படுகின்ற உயர்வான மிகைத் திரவத்தன்மை மட்டம் மற்றும் இதுவரையிலும் கொள்கை வட்டி வீதங்களில் குறைப்பு என்பன நிலையான குறைந்த வட்டி வீதச் சூழலொன்றில் விளைவை ஏற்படுத்துமென எண்ணப்படுகின்ற அதேவேளை சேமிப்பவர்களுக்கு சாதகமான உண்மையான ஆதாயத்தினை வழங்கும்.

**நிலையான பொருளாதார மீட்சியொன்றினை உறுதிசெய்வதில் உற்பத்தித் திறன்மிக்க துறைகளுக்கான கொடுகடன் மிகமுக்கியமானதாக தொடர்ந்தும் காணப்படுகின்றது**

உள்நாட்டு கொடுகடன் விரிவடைதலினைப் பிரதிபலித்து, விரிந்த பண ($M_{2b}$) வளர்ச்சி தொடர்ந்தும் துரிதமடைந்தது. எவ்வாறாயினும், சந்தைக் கடன் வழங்கல் வீதத்தின் கணிசமான குறைப்பிற்கு மத்தியில், பொருளாதாரத்தின் உற்பத்தித்திறன் மிக்க துறைகளை நோக்கிய கொடுகடன் வளர்ச்சியானது போதாமல் காணப்படுவது தென்படுகின்றது. முன்னோக்கிச் சென்று நோக்குகையில், குறைவான கடன் வழங்கல் வீதங்கள், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் துறைக்கு மீள்கடன் வழங்கலுக்கு வங்கிகளுக்கென முன்னுரிமைத் துறை கடன் வழங்கல் இலக்குகளை அறிமுகப்படுத்தல் மற்றும் முதலீட்டாளர் மனோபாவங்களை மேம்படுத்துவதன் மூலம் தூண்டப்பட்ட கொடுகடனுக்கான கேள்வி அதிகரித்தல் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி விரைவுபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உற்பத்தித்திறன் மிக்க வளர்ச்சிக்குத் துணையளிக்கின்ற துறைகளுக்கு கொடுகடனை விரிவுபடுத்துவதில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கு

வங்கித்தொழில் சமூகத்துடனும் ஏனைய ஆர்வலர்களுடனுமான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

**2021இல் பணவீக்கம் மட்டுப்படுத்தப்பட்டு காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது**

நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கம் மற்றும் மையப் பணவீக்கம் இரண்டும் தளம்பல்மிக்க உணவு விலைகளுக்கு மத்தியிலும் பொருளாதாரத்தின் மட்டுப்படுத்தப்பட்டு திரண்ட கேள்வி நிலைமைகளைப் பிரதிபலித்து குறைவான மட்டத்தில் காணப்படுகின்றது. உள்நாட்டு வழங்கல் நிலைமைகளில் எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்புக்கள் மூலம் துணையளிக்கப்பட்டு ஆண்டின் எஞ்சியுள்ள காலப்பகுதியில் பணவீக்கம் மட்டுப்படுத்தப்பட்டு காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. நடுத்தரகாலத்தில் 4-6 சதவீதம் கொண்ட இலக்கிடப்பட்ட வீச்சில் பணவீக்கத்தினைப் பேணுவதை நோக்கியும் இது பங்களிக்கும்.

**கொள்கை வீதங்கள் தற்போதைய மட்டங்களில் பேணப்படுகின்றன**

மேலே குறிப்பிடப்பட்டவாறான தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு, நாணயச் சபையானது, தற்போதைய தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையானது பொருத்தமானது எனக் கருதுகின்றது. அதற்கமைய, அதன் வட்டி வீதங்களை அதாவது மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே தற்போதுள்ள 4.50 சதவீதம் மற்றும் 5.50 சதவீத மட்டத்தில் பேணுவதென சபை தீர்மானித்துள்ளது. பொருளாதாரம், உறுதியாக புத்துயிர்பெறுகின்ற அறிகுறிகளை காண்பிக்கும் வரை குறைவான கடன் வழங்கல் வீதங்கள் தொடர்ந்தும் இருக்கவேண்டிய தேவையினை சபை வலியுறுத்தியது. மேலும், வங்கிகள் பொருளாதாரத்தின் உற்பத்தித்திறன்மிக்க துறைகளுக்கு கடன்வழங்குவதை அதிகரிப்பதற்கும் தேசிய கொள்கைப் பணிப்புரைக்கு இசைவாக உள்நாட்டு உற்பத்திக்கு ஆதரவளிப்பதற்குமான தேவையினையும் சபை அவதானத்தில் கொண்டது. மத்திய வங்கியானது உள்நாட்டு மற்றும் உலகளாவிய பேரண்டப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் சந்தை அபிவிருத்திகளைத் தொடர்ந்தும் கண்காணிக்கும் என்பதுடன் நிலைபெறத்தக்க உயர்வான வளர்ச்சிப் பாதையினை பொருளாதாரம் சென்றடைகின்ற அதேவேளை, நெகிழ்வுமிக்க பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் இலக்கிடப்பட்ட 4-6 சதவீத வீச்சினுள் பணவீக்கத்தினைப் பேணுவதற்கு உதவுவதற்கு மேலும் முனைப்பான வழிமுறைகளை எடுக்கும்.

**நாணயக் கொள்கை தீர்மானம்: கொள்கை வீதங்கள் மற்றும் நியதி ஒதுக்கு வீதங்கள் மாற்றமடையவில்லை**

| | |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 4.50% |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 5.50% |
| வங்கி வீதம் | 8.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 2.00% |

**தகவல் குறிப்பு:**

ஆளுநர் தேசமான்ய பேராசிரியர் டபிள்யு டி லக்ஷ்மன் அவர் தலைமையிலான ஊடக மாநாடு, 2021 மாச்சு 04ஆம் திகதி அன்று மு.ப. 11.00 மணிக்கு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2021 ஏப்பிறல் 08ஆம் நாள் வெளியிடப்படும்.

**இணைப்பு I**

## தரவு இணைப்பு

### அட்டவணை 01: பணவீக்கம்

| மாதம் | | யூலை 20 | ஓகத் 20 | செத் 20 | ஒத் 20 | நவெ 20 | திசெ 20 | சன 21 | பெப் 21 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 4.2 | 4.1 | 4.0 | 4.0 | 4.1 | 4.2 | 3.0 | 3.3 |
| | தேநுவிசு(2013=100) | 6.1 | 6.2 | 6.4 | 5.5 | 5.2 | 4.6 | 3.7 | - |
| மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 3.2 | 3.2 | 2.9 | 3.0 | 3.0 | 3.5 | 2.7 | 2.6 |
| | தேநுவிசு(2013=100) | 4.5 | 4.6 | 4.8 | 4.5 | 4.5 | 4.7 | 4.2 | - |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

### அட்டவணை 02: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | | ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | செத் 20 | ஒத் 20 | நவெ 20 | திசெ 20 | சன 21 | செத் 20 | ஒத் 20 | நவெ 20 | திசெ 20 | சன 21 |
| ஒதுக்குப் பணம் | 891 | 928 | 936 | 964 | 976 | -2.5 | 2.2 | 1.9 | 3.4 | 4.3 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 8,870 | 9,017 | 9,136 | 9,406 | 9,533 | 19.2 | 20.9 | 22.3 | 23.4 | 23.7 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | (66) | (247) | (281) | (209) | (321) | -151.9 | -313.7 | -390.1 | -308.0 | -458.9 |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 8,936 | 9,264 | 9,417 | 9,615 | 9,854 | 22.1 | 26.2 | 27.7 | 27.8 | 29.4 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 3,982 | 4,263 | 4,363 | 4,548 | 4,758 | 45.8 | 56.2 | 61.5 | 62.7 | 63.1 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 1,018 | 1,003 | 1,011 | 1,002 | 1,058 | 34.8 | 27.1 | 25.9 | 22.5 | 29.0 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 5,994 | 6,054 | 6,094 | 6,171 | 6,197 | 5.8 | 6.3 | 6.2 | 6.5 | 6.9 |
| விரிந்த பணம் ($M_4$) | 10,860 | 11,049 | 11,194 | 11,462 | 11,643 | 17.9 | 19.5 | 20.8 | 21.4 | 21.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 03: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | செத் 20 முடிவில் | ஒத் 20 முடிவில் | நவெ 20 முடிவில் | திசெ 20 முடிவில் | சன 21 முடிவில் | பெப் 21 முடிவில் | 2021 மாச் 03இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 4.50 | 4.50 | 4.50 | 4.50 | 4.50 | 4.50 | 4.50 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 5.50 | 5.50 | 5.50 | 5.50 | 5.50 | 5.50 | 5.50 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 4.53 | 4.53 | 4.54 | 4.55 | 4.55 | 4.55 | 4.54 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | |
| 91-நாள் | 4.51 | 4.57 | 4.64 | 4.69 | 4.69 | 4.90 | 4.95 |
| 182-நாள் | 4.64 | 4.69 | 4.76 | 4.80 | 4.75 | 4.99 | 5.03 |
| 364-நாள் | 4.89 | 4.96 | 5.00 | 5.05 | 4.98 | 5.09 | 5.10 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 6.19 | 5.85 | 5.83 | 5.81 | 5.90 | 5.76 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 11.21 | 10.82 | 10.55 | 10.29 | 10.17 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 8.82 | 8.73 | 8.71 | 8.38 | 8.37 | - | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 6.44 | 6.23 | 6.01 | 5.80 | 5.58 | 5.36 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 7.90 | 7.59 | 7.37 | 7.14 | 6.88 | 6.53 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 5.31 | 5.10 | 4.96 | 4.93 | 5.19 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் | 5.46 | 5.25 | 5.07 | 5.08 | 5.30 | - | - |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*